செய்தி வெளியீடு எண் : 1833 நாள் : 19.10.2022

## செய்தி வெளியீடு

மாண்புமிகு மீன்வளம்– மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள், இன்று (19.10.2022) சென்னை, நந்தனம். மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் அலுவலகத்தில், மீனவ மக்களுக்கு சேமிப்பு நிவாரணத் திட்டங்கள் மற்றும் சிறப்பு நிவாரண உதவித் தொகை திட்டங்களின் கீழ் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக உதவித்தொகையினை வரவு வைக்கும் வகையிலான ஆணைகளை வழங்கினார்.

சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் கடல் மீனவர் மற்றும் மீனவ மகளிர் ஒருவர் தனது பங்குத் தொகையாக மொத்தம் ரூ. 1,500/- செலுத்துவர். பயனாளிகள் செலுத்தும் பங்குத் தொகைக்கு ஈடாக அரசு பங்குத் தொகையாக மொத்தம் ரூ.3,000/– சேர்த்து மீன்பிடி குறைவு காலங்களில் நிவாரணத் தொகையாக பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.4,500/– ஆண்டு தோறும் வழங்கி வருகிறது.

இது மட்டுமில்லாமல் மேற்படி காலத்தில் மீனவ பயனாளிகளுக்கு வழங்கப்படும் நிவாரண தொகை போதுமானதாக இல்லை என்பதால், சிறப்பினமாக மீனவ குடும்பம் ஒன்றுக்கு தலா ரூ.6,000/– வீதம் சிறப்பு நிவாரணத் தொகையாக ஆண்டு தோறும் அரசு வழங்கி வருகிறது.

2022–23ம் ஆண்டிற்கான மீன்பிடி குறைவு காலத்திற்கான சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் 14 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 2.11 இலட்சம் கடல் மீனவர்களுக்கு அரசின் பங்குத் தொகையாக ரூ.63.26 கோடி, 2.11 கடல் மீனவ மகளிருக்கு அரசின் பங்குத் தொகையாக ரூ.63.36 கோடி, 1.74 இலட்சம் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித்

தொகையாக ரூ.104.38 கோடி ஆக மொத்தம் ரூ.231.00 கோடி நிவாரணத் தொகை அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி குறைவு கால நிவாரணம், மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத்திட்டம் மற்றும் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டங்கள் முதற்கட்டமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம் கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய 11 மாவட்டங்களில் அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் முடிய செயல்படுத்தப்படுகிறது.

முதற்கட்டமாக மேற்கண்ட 11 மாவட்டங்களை சேர்ந்த 1.49 இலட்சம் மீனவர்கள், 1.48 இலட்சம் கடல் மீனவ மகளிர் மற்றும் 1.29 இலட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி குறைவு கால நிவாரண தொகையாக மொத்தம் ரூ.166.73 கோடி வழங்கப்படவுள்ளது.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வழியாக நேரடி நியமனம் மூலம் இளநிலை பொறியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்ட 12 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு ஆ.கார்த்திக், இ.ஆ.ப., மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர் டாக்டர் கே.சு.பழனிசாமி, இ.ஆ.ப. மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in